வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவண குமார்

தேதி 24.12.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை மத்திய பிரதேச மாநிலத்தில் பல்வேறு திட்டங்களை துவக்கி வைத்து அட்டல் பிகாரி வாஜ்பாய் நினைவு தபால் தலையை வெளியிட உள்ளார்.

நாட்டின் ஸ்மார்ட் போன் ஏற்றுமதி மதிப்பு 1 லட்சம் கோடி ரூபாயை கடந்துள்ளதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

நாட்டின் முன்னேற்றத்திற்கு நல்ல நிர்வாகம் அவசியம் என்று, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தெரிவித்துள்ளார்.

5 மற்றும் 8-ஆம் வகுப்புகளுக்கு மத்திய கல்வி வாரியம் அறிவித்துள்ள கட்டாய தேர்ச்சி முறை ரத்து உத்தரவை புதுச்சேரி அரசு ஏற்பதாக கல்வி அமைச்சர் திரு நமச்சிவாயம் தெரிவித்துள்ளார்.

*பிரதமர்-மத்திய பிரதேசம்*

முன்னாள் பிரதமர் அமரர் வாஜ்பாயின் நூறாவது பிறந்த தினத்தை முன்னிட்டு பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை மத்திய பிரதேச மாநிலம் கஜுரஹோவில் பல்வேறு வளர்ச்சி திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி வேறு பல திட்டங்களை துவக்கி வைக்க உள்ளார்.

அட்டல் பிகாரி வாஜ்பாய் நூற்றாண்டு நினைவு தபால் தலை மற்றும் நாணயத்தை பிரதமர் வெளியிடுவதோடு, உள்ளூர் அளவில் நல்லாட்சி வழங்கும் நோக்கில் கிராம பஞ்சாயத்துக்களுக்கான ஆயிரத்து 153 அட்டல் கிராம கட்டடங்களில் கட்டுமான பணிகளுக்கு அடிக்கல் நாட்ட உள்ளார்.

தேசிய தொலைநோக்கு திட்டத்தின் கீழ், நதிகளை ஒன்றோடு ஒன்று இணைக்கும் திட்டமான Ken-Betwa ஆறுகளை கால்வாய்கள் மூலம் இணைக்கும் திட்டத்திற்கும் பிரதமர் நாளை அடிக்கல் நாட்டுகிறார். இந்த இணைப்பு மூலம் மத்திய பிரதேசம் மற்றும் உத்தரபிரதேசத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள லட்ச கணக்கான விவசாய குடும்பங்கள் பாசன வசதிகள் பெறுவதோடு, அந்த பகுதி மக்களுக்கு குடிநீர் வசதிகளும் கிடைக்கும்.

*ஜக்தீப் தன்கர்*

குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்தீப் தன்கர் 2 நாள் பயணமாக நாளை தெலங்கானா மாநிலத்தில் உள்ள ஐதராபாத் மற்றும் மேடக்

நகரங்களுக்கு செல்கிறார். தமது தெலங்கானா பயணத்தின் போது, மேடக் மாவட்டம் துண்கி க்ரிஷி விஞ்யான் கேந்திராவில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி மன்றத்தில் நடைபெறும், இயற்கை மற்றும் இயற்கை விவசாயம் சார்ந்த விவசாயிகள் மாநாட்டில் தலைமை விருந்தினராக கலந்து கொள்கிறார்.

வைஷ்ணவ்

இந்த நிதியாண்டின் முதல் 8 மாதங்களில், நாட்டின் ஸ்மார்ட் போன் ஏற்றுமதி மதிப்பு 1 லட்சம் கோடி ரூபாயை கடந்துள்ளதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். உற்பத்தியுடன் கூடிய ஊக்கத் திட்டம் மூலம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டுக்கான ஸ்மார்ட் போன் ஏற்றுமதி 45 சதவிகிதம் வளர்ச்சி கண்டுள்ளதாக சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அமைச்சர் தெரிவித்துள்ளார். உற்பத்தியுடன் இணைக்கப்பட்ட ஊக்கத் திட்டத்தின் வாயிலாக, ஸ்மார்ட் போன் துறையில் 3 லட்சத்திற்கும் அதிகமான நேரடி வேலை வாய்ப்புகளும், 6 லட்சத்திற்கும் அதிகமான மறைமுக வேலைவாய்ப்புகளும் உருவாக்கப் பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

BSNL

BSNL மொபைல் சேவைக்கான கட்டணங்களை உயர்த்தும் எண்ணம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி வம்புபட்டு கிராமத்தில் BSNL நிறுவனம் சார்பில் வாடிக்கையாளர்களுக்கான பல்வேறு புதிய சேவைகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளன. இன்டர்நெட் இலவச தொலைக்காட்சி, தேசிய வை-பை இன்டர்நெட் தொலைக்காட்சி உள்ளிட்ட சேவைகளை BSNL தலைவரும் நிர்வாக இயக்குநருமான திரு ராபர்ட் ரவி ஜெரார்டு துவக்கி வைத்தார். புதிய சேவைகள் வாயிலாக BSNL டிவி மூலம் 400-க்கும் மேற்பட்ட நேரடி தொலைக்காட்சி சேனல்கள், செல்போன் வாடிக்கையாளருக்கு இலவசமாக வழங்கப்படுவதாக துவக்க நிகழ்ச்சியின் போது திரு ஜெரார்டு தெரிவித்தார். தற்போது உள்ள 4-ஜி சேவையை 5-ஜி சேவையாக தரம் உயர்த்தும் அளவிற்கு தொழில்நுட்ப வசதிகள் உள்ளதாகவும், புதுச்சேரியில் கடந்த 3 மாதங்களில் 20 ஆயிரம் புதிய இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். BSNL மொபைல் சேவைக்கான கட்டணங்களை தற்போது உயர்த்தும் எண்ணம் இல்லை என்று தெரிவித்த திரு ஜெரார்டு, புதுச்சேரியில் தற்போதுள்ள 130

BSNL டவர்களுடன் மேலும் 100 டவர்கள் புதிதாக நிறுவப்பட்டு, தடையற்ற மற்றும் மேம்பட்ட சேவைகள் வழங்கப்படும் என்றும்

தெரிவித்தார். தற்போது மண்ணாடிபட்டு, வம்புபட்டு, சோரப்பட்டு உள்ளிட்ட 5 கிராமங்களில் வை-பை வசதி வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார். இதுகுறித்து மேலும் தெரிவித்த அவர்..........

(வாய்ஸ்)

*நல்லாட்சி வாரம்*

நல்லாட்சி வாரத்தை முன்னிட்டு அரியாங்குப்பத்தில் நடைபெற்ற கிராமங்களை நோக்கி மக்கள் குறை தீர்ப்பு முகாமில் துணை நிலை ஆளுநர் திரு கே கைலாஷ்நாதன், பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கினார். அரியாங்குப்பம் மற்றும் மணவெளி தொகுதிகளை உள்ளடக்கிய கிராம மக்கள் இந்த முகாமில் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் பேசிய துணை நிலை ஆளுநர், நாட்டின் முன்னேற்றத்திற்கு நல்ல நிர்வாகம் அவசியம் என்றும், குடிமக்களின் குறைகள் மற்றும் தேவைகளை அறிந்து செயல்படும் நிர்வாகமே நல்ல நிர்வாகம் என்று தெரிவித்தார். நாட்டின் முதுகெலும்பாக உள்ள கிராமங்களில் இருந்து தான் நல்லாட்சி துவங்க வேண்டும் என்று கூறிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலை நோக்கு திட்டங்களில் ஒன்று தான் இந்த நல்லாட்சி வார விழா என்றும் தெரிவித்தார். மத்திய மாநில அரசுகளின் பல்வேறு வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்களை அதிகாரிகள் மூலம் தெரிந்து கொண்டு, மக்கள் பயன்பெற வேண்டும் என்பதே தமது விருப்பம் என்றும்

திரு கைலாஷ்நாதன் கூறினார். 2025-ஆம் ஆண்டுக்குள் காசநோய் இல்லாத நாடாக இந்தியாவை மாற்ற வேண்டும் என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையின் கீழ், புதுச்சேரியில் இதுவரை 40 ஆயிரம் பேருக்கு பரிசோதனை செய்யப்பட்டு, 12 பெண்களுக்கு காசநோய் உள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்………………

(வாய்ஸ்)

நிகழ்ச்சியில் சட்டப் பேரவைத் தலைவர் திரு செல்வம், அரியாங்குப்பம் சட்டமன்ற உறுப்பினர் திரு தட்சிணாமூர்த்தி, தலைமைச் செயலர் திரு சரத் சவ்கான், மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் நிறைவில், பிரதமரின் தாயின் பெயரில் ஒரு மரம் என்ற திட்டத்தின் கீழ் பொது மக்களுக்கு மரக் கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.

நமச்சிவாயம்

5 மற்றும் 8-ஆம் வகுப்புகளுக்கு மத்திய கல்வி வாரியம் அறிவித்துள்ள கட்டாய தேர்ச்சி முறை ரத்து உத்தரவை புதுச்சேரி அரசு ஏற்பதாக கல்வி அமைச்சர் திரு நமச்சிவாயம் தெரிவித்துள்ளார். புதுச்சேரி, மத்திய அரசின் கல்வித் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வருவதால் இந்த உத்தரவை ஏற்பதாகவும், தனியார் பள்ளிகளுக்கும் இந்த உத்தரவு

பொருந்தும் என்றும் தெரிவித்தார். இந்த கட்டாய தேர்ச்சி ரத்து உத்தரவு மூலம் மாணவர்களின் கல்வித் தரம் உயரும் என்றும், மாணவர்களின் இடை நிற்றல் இருக்காது என்றும் திரு நமச்சிவாயம் தெரிவித்தார்.

முதலமைச்சர்-கூட்டம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வன்கொடுமை தடுப்பு சட்டம் 1989-ன் அமலாக்கத்தை மறுஆய்வு செய்யும் மாநில உயர் மட்ட கண்காணிப்பு குழுக் கூட்டம் புதுச்சேரி சட்டப்பேரவை வளாகத்தில் நடைபெற்றது. முதலமைச்சர் திரு ரங்கசாமி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திரு சாய் ஜே சரவணன் குமார், சட்டப் பேரவை துணைத் தலைவர் திரு ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர் திருமதி சந்திர பிரியங்கா, தேசிய பட்டியலின ஆணைய இயக்குநர் திரு ரவி வர்மன், அரசுச் செயலர் டாக்டர் முத்தம்மா, துறையின் உயர் அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கிரிக்கெட்

வதோதராவில் இந்திய-மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையே இன்று நடைபெற்று வரும் ஐசிசி மகளிர் 2-ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் டாஸ் வென்று முதலில் ஆடிய இந்திய அணி 50 ஓவர் முடிவில்

5-- விக்கெட் இழப்பிற்கு, 358- ரன் எடுத்து, 359-- ரன் எனும் வெற்றி இலக்கை மேற்கிந்திய தீவுகள் அணிக்கு நிர்ணயித்துள்ளது.

3 போட்டிகள் கொண்ட இந்த தொடரின் முதலாவது போட்டியில், இந்திய அணி, மேற்கிந்திய தீவுகள் அணியை 211 ரன் வித்தியாசத்தில் வெற்றி கொண்டது குறிப்பிடத் தக்கது.

*இந்திய வானிலை ஆய்வுத் துறை*

இந்திய வானிலை ஆய்வுத் துறையின், வானிலை முன்னறிவிப்பு பற்றிய தகவல் கணிப்புகளின் துல்லியம், கடந்த 10 ஆண்டுகளில் 40 முதல் 50 சதவிகிதம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்று பத்திரிக்கையாளர்களிடம் இதனை தெரிவித்த இந்திய வானிலை ஆய்வுத் துறையின் தலைமை இயக்குநர் திரு மிருத்யுன் ஜெய் மகோபாத்ரா, கனமழைக்கான கணிப்புகளின் துல்லியமும் 60-ல் இருந்து 80 சதவிகிதமாக அதிகரித்து உள்ளதாகவும் தெரிவித்தார். ஆரம்பத்தில் 80 கணிப்பு மையங்கள், இருந்த நிலையில், தற்போது 550 துறை சார்ந்த ஆய்வு மையங்களும், 2 ஆயிரம் தானியங்கி வானிலை மையங்களும், 39 இடங்களில் டாப்ளர் ரேடார் கருவிகள் உள்ளதாகவும் தெரிவித்தார். 2026-ஆம் ஆண்டிற்குள் மேலும் 34 ரேடார்கள் நிறுவப்படும் என்றும் தெரிவித்த இயக்குநர், அடுத்த 5 ஆண்டுகளுக்குள் இந்திய வானிலை ஆய்வுத்

துறையின் கணிப்புகளின் துல்லியம் மேலும் 5 முதல் 15 சதவிகிதம் அதிகரிக்கும் என்றும் தெரிவித்தார்.

BCCI – *மகளிர்*

19-வயதிற்கு உட்பட்டோருக்கான மகளிர் டி-20 உலக கோப்பை 2025 கிரிக்கெட் போட்டியில் பங்கேற்க உள்ள இந்திய மகளிர் அணியின் 15 பேர் கொண்ட பட்டியலை BCCI அறிவித்துள்ளது. ஆல் ரவுண்டர் நிக்கி பிரசாத் அணித் தலைவராகவும், சனிக்கா சால்கே துணை தலைவராகவும், கமலினி மற்றும் பவிகா ஆதிரே விக்கெட் கீப்பர்களாக செயல்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. Under-19, ஐசிசி மகளிர் டி-20 உலக கோப்பை கிரிக்கெட் போட்டி, வரும் ஜனவரி மாதம் 18-ஆம் தேதி மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் துவங்க உள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை மத்திய பிரதேச மாநிலத்தில் பல்வேறு திட்டங்களை துவக்கி வைத்து அட்டல் பிகாரி வாஜ்பாய் நினைவு தபால் தலையை வெளியிட உள்ளார்.

நாட்டின் ஸ்மார்ட் போன் ஏற்றுமதி மதிப்பு 1 லட்சம் கோடி ரூபாயை கடந்துள்ளதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

நாட்டின் முன்னேற்றத்திற்கு நல்ல நிர்வாகம் அவசியம் என்று, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தெரிவித்துள்ளார்.

5 மற்றும் 8-ஆம் வகுப்புகளுக்கு மத்திய கல்வி வாரியம் அறிவித்துள்ள கட்டாய தேர்ச்சி முறை ரத்து உத்தரவை புதுச்சேரி அரசு ஏற்பதாக கல்வி அமைச்சர் திரு நமச்சிவாயம் தெரிவித்துள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.